மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 15 வெள்ளிக்கிழமை 01.11.2024 கதிர் 404




# தூதரக அதிகாரிகள் 16 பேர் நாட்டுக்கு மீள அழைப்பு!

## அநுர அரசின் அதிரடி




**கொழும்பு, நவ. 01**

**வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் பணியாற்றும் 16 இலங்கையர்களை நாட்டுக்குத் திருப்பி அழைப்பதற்கு இலங்கை அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**


**முன்னைய ஆட்சிக் காலங்களில் அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் இலங்கைத் தூதரகங்களில் பணிக்கு அமர்த்தப்பட்டவர்கள் என்ற அடிப்படையில் இவர்கள் அனைவரையும் உடனடியாக நாடு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அரசாங்கத்தின் இந்த முடிவின் படி, அமெரிக்கா, லொஸ்ஏஞ்சல்ஸ் துணைத் தூதரகத்துக்கான இலங்கைத் தூதுவர் கலாநிதி லலித் சந்திரதாஸ, சீனா, சங்காய் துணைத் தூதரகத்துக்கான இலங்கைத் தூதுவர் அநுர பெர்ணாண்டோ, சென்னைக்கான துணை உயர்ஸ்தானிகர் கலாநிதி டி.வெங்கடேஸ்வரன், சவுதி அரேபியா, ஜெட்டா துணைத் தூதரகத்துக்கான இலங்கைத் தூதுவர் எஸ்.எம்.ஏ.எஃவ். மௌலானா,

2➤

## பல்கலை மாணவர்களுடன் சென்ற பேருந்து விபத்து மாணவிகள் மூன்று பேர் சாவு : 35 பேருக்குக் காயம்!

### பதுளையில் சோகம்



பதுளை, நவ. 01

பதுளை, துன்ஹிந்த வீதியில் பேருந்து ஒன்று தடம்புரண்டு விபத்து ஏற்பட்டதனால் மூன்று மாணவிகள் உயிரிழந்துள்ளதுடன், 35 பேர் காயமடைந்துள்ளனர் என்று பதுளைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். யாயமடைந்தவர்களில் ஆறு பேர் கவலைக்கிடமான நிலைமையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக பதுளை பொது வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. பதுளை மஹியங்கன பிரதான வீதியின் நான்காவது மைல் கல் பகுதியில் இன்று காலை 7.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தில் சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமான பேருந்து ஒன்றே விபத்துக்குள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது. விபத்தின் போது சுற்றுலா சென்ற சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் தெற்கு வளாக மாணவர்கள் உட்பட 41 பேர் பய ணித்துள்ளனர். காயமடைந்த 35 பேரும் பதுளை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பதுளைப் பொலீஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ஐ-05)



### 34 வருடங்களின் பின்

## பலாலி வீதி தோலகட்டி சந்தி வரை மக்கள் பாவனைக்காகத் திறப்பு!

பலாலி, நவ.01

யாழ்ப்பாணம் பலாலி வீதி - வயாவிளான் சந்தி - தோலகட்டி சந்தி வரையிலான பகுதி 34 வருடங்களுக்குப் பின்னர் மக்கள் போக்குவரத்துக்காக இன்று காலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1.250 கிலோமீட்டர் தூரமான இந்த வீதி இன்று காலை 6.00 மணி முதல் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. யாழ்ப்பாணம் - பலாலி வீதியில் வயாவிளான் மத்திய கல்லூரியில் இருந்து அச்சுவேலி, தோலகட்டி வரையிலான பகுதியே பொதுமக்கள் போக்குவரத்துக்காக அனுமதிக்கப்பட்டது.

1990 ஆம் ஆண்டு முதல் இராணுவ நடவடிக்கை காரணமாக மூடப்பட்ட இந்த வீதியில் நீண்ட காலமாக படையினர் நிரந்தர வீதித் தடை அமைத்துக் காவல் கடமையில் ஈடுபட்டு வந்தனர். இன்று காலை வீதியில் காணப்பட்ட வீதித் தடைகள் அகற்றப்பட்டு பொது மக்கள் போய் வர அனுமதிக்கப்பட்டனர்.

(ஐ)

## திறந்து விடப்பட்ட பகுதிகளில்

# குடியிருக்கவும், ஆலய வழிபாடுகளில் ஈடுபடவும் படையினர் அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை!

*பலாலி, நவ. 01*

*பலாலி வீதியில் உள்ள வசாவிளான் சந்தியில் இருந்து அச்சுவேலி, தோலாகட்டிச் சந்தி வரையிலான வீதியைத் திறந்து விட்டது போல , அந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேறவும், அங்குள்ள ஆலயங்களை புனரமைத்து வழிபாடுகளை மேற்கொள்ளவும் படையினர் அனுமதிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*வல்லை – அராலி வீதியில் தெல்லிப்பளை கட்டுவன் சந்தி பகுதியில் இருந்து அச்சுவேலி தோலாக்கட்டி சந்தி வரையிலான வீதி கடந்த 34 வருடங்களுக்கு மேலாக இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படுகிறது. அதனால் யாழ்ப்பாணம், வல்லை – அராலி வீதியின் மீதமுள்ள பகுதியையும் மக்கள் பாவனைக்காகத் திறந்து விட வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*இந்த வீதியில் பலாலி வீதியில் உள்ள வசாவிளான் சந்தியில் இருந்து அச்சுவேலி, தோலாகட்டிச்சந்தி வரையிலான சுமார் 1 கிலோ மீற்றர் தூரமான வீதி இன்று வெள்ளிக்கிழமை காலை திறந்து விடப்பட்டுள்ளது.*

*மிகுதி வீதி இன்னமும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதியினுள்ளே காணப்படுகிறது. அதையும் விரைவில் மக்கள் பாவனைக்கு விடுவிக்க வேண்டும் என அந்த மக்களால் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

*அச்சுவேலி மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் வாழும் மக்கள் வலி வடக்கில் அமைந்துள்ள தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு வருவதற்கு, வல்லை – அராலி வீதியூடாகப் பயணித்து , வசாவிளான் சந்தியை அடைந்து , குரும்பசிட்டி ஊடாக சுற்றி , மீண்டும் வல்லை – அராலி வீதியை அடைந்தே தமது பயணத்தை தொடர வேண்டிய நிலையில் உள்ளனர்.*

*அதனால் கட்டுவான் சந்திக்கும் வசாவிளான் சந்திக்கும் இடையிலான வல்லை – அராலி வீதியை இராணுவத்தினர் மக்கள் பாவனைக்கு விடுவிக்க வேண்டும் என அந்தக் கோரிக்கையில் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.*

*அதேபோன்று வசாவிளான் சந்தியில் இருந்து பொன்னாலை –பருத்தித்துறை வீதியும் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள்ளையே காணப்படுகிறது. அந்த வீதியையும் திறக்க வேண்டும் என மக்கள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர். யாழ்ப்பாண நகர் பகுதியில் இருந்து பலாலி வீதியூடாக பலாலி வடக்கு பிரதேசத்துக்கு மக்கள் நேரடியாக பயணிக்க முடியாது. காங்கேசன்துறை வீதியூடாகவே பயணிக்க வேண்டிய நிலையில் உள்ளனர். அதனால் வசாவிளான் சந்தியில் இருந்து பலாலி வடக்கு பகுதிக்கு செல்லும் பலாலி வீதியினையும் முற்றாக மக்கள் பாவனைக்கு இராணுவத்தினர் திறந்து விட வேண்டும்.*

*அதே நேரம், வீதியைத் திறந்து விட்டது போல , அந்தப் பகுதியில் மக்கள் மீள் குடியேறவும், அங்குள்ள ஆலயங்களை புனரமைத்து வழிபாடுகளை மேற்கொள்ளவும் படையினர் அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியுள்ளனர்.*

*(ஐ–09)*

### அநுர அரசின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரக அதிகாரி, நிஷான் மனிக் முத்துகிருஸ்ணா, வோஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதரக மூன்றாம் நிலைச் செயலாளர் தாரக திசநாயக்க, லண்டனிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் மூன்றாம் நிலைச் செயலாளர் சஞ்ஜய் புஞ்சிநிலமே, ரோம் தூதுவராலய அதிகாரி மெல்ஹி சந்திம பெரேரா. ஆஸ்திரேலியாவின் கன்பெரா உயர்ஸ்தானிகராலய அதிகாரி டினுக்க கரமெலின் பெர்ணான்டோ,

பரீஸ் தூதரக மூன்றாம் நிலைச் செயலாளர் சஹஸ்ர பண்டார, மொஸ்கோ தூதரக அதிகாரி பந்துல டீ சொய்ஸா, புதுடில்லிக்கான இலங்கைத் துணைத் தூதரக அதிகாரி கலாநிதி அன்வர் மெஹமட் ஹம்தானி, பேய்ஷரூட் தூதரக மூன்றாம் நிலைச் செயலாளர் பிரயங்கிகா திசநாயக்கே, அங்காராவின் இரண்டாம் நிலைச் செயலாளர் ஜஸ்மின் ஹில்மி மொஹமட், நெதர்லாந்தின் ஹகுகோ தூதரகத்தின் துணைத் தூதுவர் அஸ்வினி ஹப்பன்கம, சுவீடனின் ஸ்ரொக்லோம் தூதரக அதிகாரி ஜானக ரணதுங்க ஆகியோரையே உடனடியாக டு திரும்புமாறு வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, முன்னைய ஆட்சிக் காலங்களில் அரசியல் செல்வாக்கின் காரணமாக வெளிநாட்டுத் தூதரகங்களில் பணிக்கமர்த்தப்பட்ட மேலும் பலர் விரைவில் திருப்பி அழைக்கப்படவுள்ளதாக விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்








4th Project
இது ஒரு
கற்பகவனம்
செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

தொடர்புகளுக்கு: 0777 43 5557




# முள்ளிவாய்க்காலில் இறந்த ஆத்மாக்களே கோட்டாவை ஆட்சியிலிருந்து விரட்டின!

## தமிழரசு வேட்பாளர் ஜெயசிறில் உரை





(வி.ரி. சகாதேவராஜா)

"69 லட்சம் வாக்குகளை அளித்து கோட்டாபயவை வெற்றி பெறச்செய்த மக்களே அவரை விரட்டியடித்தமைக்கு முள்ளிவாய்க்காலில் இறந்த ஆத்மாக்களே காரணமாகும் என்றும், ஒன்பது நாடுகளுடன் சேர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடித்தது போல, தமிழரசுக் கட்சியையும் திட்டமிட்டு வலுவிழக்கச் செய்வதற்கு சதி நடக்கிறது. ஆனால் அது நடக்காது: முடியவே முடியாது - நாம் நிச்சயமாக வெல்வோம்" என்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

காரைதீவு விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் நேற்றிரவு நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

காரைதீவு விளையாட்டுக் கழகத்தின் தலைவர் வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்இ கடந்த காலங்களில்அம்பாறை மாவட்டத்தில்தமிழ்பிரதிநிதித்துவம் இழக்கப்படுவதற்காகவும், தமிழீழ விடுதலைப் புலிகளை பிரிவடையச் செய்த அதாவுல்லாவை வெற்றி பெறச் செய்வதற்குமாகவே கருணம்மானை அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட செய்வதற்கு கொண்டு வந்தார்கள்.

காரைதீவு மண்ணின்மைந்தர் அமரத்துவமடைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் எமக்கு மீனைக் கொடுக்காமல் தூண்டிலை மாத்திரம் தந்து விட்டு சென்றுள்ளார். அதன் அடிப்படையில் நாங்கள் அபிலாசைகளையும் அபிவிருத்திகளையும் அடைந்து வருகின்றோம். எமக்கு பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபையை எமது 12 கிராம பிரிவுகளோடு மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி ஆகிய ஊர்களையும் உள்ளடக்கி அமைத்துத் தந்து காரைதீவான் என்று சொல்வதற்கு ஒரு பலத்தை தந்து சென்றுள்ளார்.

அதற்குப் பிறகு வந்த எந்த ஒரு அம்பாறை மாவட்ட தமிழ் அரசியல்வாதிகளுமே உருப்படியாக நிலையான அபிவிருத்தியோ நிலையான தீர்வோ எமக்குப் பெற்றுத் தரவில்லை.

இம்முறை நான் நாடாளுமன்றம் சென்று இந்த அரசியல் பயங்கரவாதம், அரசியல் அடக்குமுறைகளை உடைத்தெறிந்து ஊழலற்ற அநுரவின் அரசாங்கத்துக்கு இந்த ஊழலை எடுத்துக் கூறி உரிமையுடன் கூடிய அபிவிருத்தி பாதையை நிர்வாகத்தினை எடுத்துச் செல்ல இருக்கின்றேன்.

69 லட்சம் வாக்குகளை அளித்து கோட்டாபயவை வெற்றி பெறச்செய்த மக்களே அவரை விரட்டியடித்தமைக்கு முள்ளிவாய்க்காலில் இறந்த ஆத்மாக்களே காரணமாகும்" என்று தெரிவித்தார். (ஐ - 55)




# மாவீரர் தினம் அனுஷ்டிக்க அநுர அரசு அனுமதிக்குமா?

## சங்கு வேட்பாளர் மயூரன் கேள்வி

வவுனியா, நவ.01

நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினக் கொண்டாட்டங்களுக்கு அநுர அரசாங்கம் அனுமதி வழங்குமா? மாவீரர் தினத்தை நினைவு கூரும் போது தான் அவர்களின் உண்மையான முகம் தெரியவரும் என்று முன்னாள் மாகாண சபை உறுப்பினரும், ஜனநாய தமிழ் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளருமான செந்தில்நாதன் மயூரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள ரெலோ அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு, கிழக்கு பகுதியிலும் எமது இளைஞர்கள் அநுரவிற்கு பின்னால் அணி திரள்வது போன்ற ஒரு நிலமை இருக்கிறது. அது உண்மையில் ஒரு மாயை. அரசியல் நோக்கத்துக்காக இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற வேண்டும் என்பதற்காக சினிமா பாணியில் கருத்துக்களைக் கூறுகிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தலுக்கு பின்னர் தான் அவர்களுடைய உண்மை முகம் தெரியும். தமிழ் மக்களுக்காக என்ன தீர்வினை தரப் போகின்றார் என்பதும், தமிழ் மக்களுக்காக என்ன புதிய விதிமுறைகளை உருவாக்கப் போகிறார்கள் என்பதும் வரவிருக்கும் நாடாளுமன்ற தேர்தலுக்கு பின்னர் தெரியவரும்.

அத்துடன் எதிர்வரும் 27 ஆம் திகதி மாவீரர் தினத்தை நினைவு கூருகின்ற போது அவர்களுடைய நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பதைப் பொறுத்து தான் அவர்களுடைய நிலைப்பாட்டை அறிய முடியும்." என்று தெரிவித்தார். (ஐ-07)



## நாடாளுமன்றத் தேர்தல் 2024

# சங்குச் சின்னத்தின் வேட்பாளர்கள் சமயத் தலைவர்களுடன் சந்திப்பு!





யாழ்ப்பாணம், நவ. 01

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளர்களுக்கும்சமயத்தலைவர்களுக்குமிடையிலான பல்வேறு சந்திப்புகள் இன்று இடம்பெற்றுள்ளன.

வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் யசோதினி கருணாகரன் மற்றும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் சசிகலா ரவிராஜ் இன்று காலை யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ் ஆயர் இல்லத்தில் சந்தித்தனர்.

அதனைத் தொடர்ந்து, யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் த.சித்தார்த்தன் தலைமையிலான வேட்பாளர்கள் குழு இன்று காலை 10 மணியளவில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளை நல்லை ஆதீனத்திலும், காலை 11 மணியளவில் யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை யாழ் ஆயர் இல்லத்திலும் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்புகளின் போது, வேட்பாளர்கள் அனைவரும் சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடி தமது நிலைப்பாடுகளைத் தெளிவுபடுத்தினர். (ஐ- 09)

---

# பெண் கல்வியின் முக்கியத்துவம்

பெண் கல்வி மறுக்கப்பட்டு வந்ததன் சமூக உளவியல் காரணங்கள் பற்றியும், எதிர்கால தலைமுறையின் முன்னேற்றத்திற்கு பெண் கல்வி ஏன் அவசியம் என்பதையும், புரிய வைப்பதாக இந்த கட்டுரையில் சத்குருவின் பார்வைகள் அமைகின்றன.



சத்குரு: ஒரு குழந்தையை கருவில் வைத்து வளர்த்து, அந்தக் குழந்தையை பிறக்கின்ற நிலைக்கு கொணர்ந்து, பிறந்த குழந்தையை சமூகத்தில் ஒரு நல்மனிதனாக உருவாக்குவதில் பெண்ணின் பங்கு மிகமிக இன்றியமையாததாய் இருக்கிறது. இந்த தலைமுறையில் பெண்கள் எத்தகைய நிலையில் இருக்கின்றார்களோ, அத்தகையதொரு தலைமுறையைத்தான் அடுத்த தலைமுறையாக உருவாக்கப் போகின்றோம். இந்த அளவிற்கு முக்கியத்துவம்மிக்க பொறுப்பு பெண்ணுக்கு இருக்கின்றபோது, பெண்களின் நலம் குறித்து நாம் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும், இல்லையா? பெண்தன்மைக்குத் தேவையான முக்கியத்துவத்தினை சமூகத்தில் நாம்கொண்டு வரவில்லையென்றால், நமது அடுத்த தலைமுறை அழிந்தது போலத்தான்.

அவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி எவ்வாறு இருக்க வேண்டும், அவர்களது விழிப்புணர்வு எப்படி இருக்க வேண்டும், உள்நிலை எப்படி இருக்க வேண்டும், அவர்களது மனநிலை, உணர்வுநிலை எப்படி இருக்க வேண்டும்? அவர்களுக்கு எத்தகைய வாய்ப்பினை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்? ஆனால், உண்ணும் உணவாக இருந்தால்கூட ஆண் குழந்தைக்கு நல்ல உணவும், பெண் குழந்தைக்கு பழையதும் கொடுக்கும் வழக்கம் இன்னும்கூட கிராமங்களில் உள்ளது.ஏனென்றால், பொருளாதாரச் சூழல் மிக முக்கியமாக, பிழைப்பு மிக முக்கியமாக இருக்கின்றபோது, ஆண்மகன் வெளியே போய்ப் போராடுகிறான், அவன் நல்ல உணவாக உண்ணட்டும். வீட்டிலிருப்பவர்கள், பழையதை உண்ணட்டும் என்ற எண்ணம் இருக்கிறது.

ஆனால், தற்போது பிழைப்பை மட்டுமே நோக்கிய எண்ணம் குறைந்து, ஒரு மனிதன் உச்சநிலைக்கு வருவது எப்படி? என்ற நோக்கம் வந்திருக்கிறது. இந்த சூழ்நிலையில் பெண்ணினத்தின் பங்கு சமூகத்தில் மிகமிக முக்கியத்துவம் பெறுகிறது. பெண்தன்மைக்குத் தேவையான முக்கியத்துவத்தினை சமூகத்தில் நாம் கொண்டு வரவில்லையென்றால், நமது அடுத்த தலைமுறை அழிந்தது போலத்தான். எனவே, அதற்குத் தேவையான மாறுதல்களை சம்பிரதாயத்திலும், சட்டத்திலும், சமூக முறைகளிலும் நாம் கொண்டுவந்தாக வேண்டும். இந்த மாற்றத்தை கொணர்ந்தால்மட்டுமே, இந்த தலைமுறையினர் நன்முறையில் வாழ்வதற்குத் தேவையானதொரு அடிப்படையினை நம்மால்உருவாக்க முடியும். இந்த சூழ்நிலையில், இந்த சமூகத்தில் பெண்களுக்கு எந்தவிதமான வாய்ப்பினை உருவாக்குகிறோமோ, அந்தவிதமான தலைமுறையைத்தான் நாம் உருவாக்கப் போகின்றோம்


'எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர்'
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியஙுடன்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557




# மகிந்தவின் பாதுகாப்பில் மாற்றம

கொபும்பு, நவ.01

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பில் மூன்றில் இரண்டு பங்கு நீக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ளமுடியாத செயற்பாடு என சட்டத்தரணி மனோஜ் கமகே கண்டனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று(31.10.2024) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்சவுக்கு ஏதேனும் ஏற்பட்டால் அதற்கு இந்த அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என கமகே தெரிவித்துள்ளார்.

இந்த நாட்டில் முப்பது வருடகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பிற்காக 2 ஜீப் வண்டிகள், 2 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கரவண்டி என்பன வழங்கப்பட்டுள்ளன.

சிலரது விருப்பத்தினால் முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளதாக மனோஜ் கமகே கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சரவை முடிவுகளை மாற்றுவது சட்ட விரோதமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி முறையான பாதுகாப்பு மதிப்பீட்டின் ஊடாக 2020 மார்ச் 19 ஆம் திகதி எடுக்கப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டும் எனவும் கமகே தெரிவித்துள்ளார். (ஐ)






# சந்திப்பு



ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத்குமாநாயக்கவுக்கும், மாலைதீவு உயர்ஸ்தானிகர் மசூத் இமாத்துக்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு ஒன்று அண்மையில் நடைபெற்றது. ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது, இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை வலுப்படுத்துவது குறித்தும், மாலைதீவு மற்றும் இலங்கையின் சுற்றுலா, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளை முன்னேற்றுவது குறித்தும் கலந்துரையாடபட்டது. (ஐ)



# அறுகம் குடா பதற்றத்தின் பின்னணி மறைமுகமாகச் செயற்பட்ட கும்பல் அம்பலம்

கொழும்பு, நவ.01

அறுகம்குடா பிரதேசத்தில் இஸ்ரேலியர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க புலனாய்வு பிரிவினர் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இது தீவிரவாத குழுவினால் திட்டமிடப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசாங்க பிரதிநிதிகள் அமெரிக்க பிரதிநிதிகளிடம் இதனை தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்புச் செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொன்தா மற்றும் ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் தலைவர்களை சந்தித்து இது குறித்து கலந்துரையாடினர்.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 6 பேர் உட்பட தலைவர்கள் மற்றும் குழுவை வழிநடத்திய ஈரான் பிரஜை உள்ளிட்ட தலைவர்கள் இந்த வலையமைப்பு தீவிரவாத வலையமைப்புடன் இணைக்கப்படவில்லை என பாதுகாப்பு செயலாளர் தலைமையிலான பிரதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் குழுவாக செயற்பட்ட ஒரு கும்பலின் முயற்சியே என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த விவாதத்தில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் அமெரிக்கப் பிரதிநிதிகளிடம், தீவிரவாதக் கருத்துக்காக இப்படியொரு குழு எப்படி தம்மைக் கொல்ல முடியும் என்று கேட்டனர்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பயண ஆலோசனை ஏன் விதிக்கப்பட்டது என்றும் அமெரிக்க பிரதிநிதிகளிடம் இலங்கை பிரதிநிதிகள் வினவியுள்ளதாக தெரியவந்துள்ளது.

(ஐ)










## மற்றுமொரு வழக்கில் பிணையில் விடுதலையான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ

கொழும்பு, நவ.01

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடியாணையை கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதன் பின்னர் மீளப்பெற்றுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட ஊழல் வழக்கு தொடர்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறிய மைக்காக பெர்னாண்டோவை கைது செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கடந்த ஒக்டோபர் 23ஆம் திகதி பிடியாணை பிறப்பித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு இணங்க குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் ஒன்றை வழங்குவதால், தமது கட்சிக்காரரால் முன்னைய விசாரணைக்கு முன்னிலையாக இயலவில்லை என பிரதிவாதி சட்டத்தரணி நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

இந்த உண்மைகளை கருத்திற்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை 25,000 ஷரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு மில்லியன் ஷரூபா சரீரப்பிணையிலும் விடுவிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இலங்கை சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர் எராஜ் பெர்னாண்டோ மற்றும் முன்னாள் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் ராஜ் மொஹிதீன் மொஹமட் சக்கீர் ஆகியோருக்கு எதிராக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவன ஊழியர்களை ஈடுபடுத்தி அரசாங்கத்திற்கு சட்டவிரோதமான நஷ்டத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளது. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி கலிங்க இந்ததிஸ்ஸ, சட்டத்தரணி வசிமுல் அக்ரம், நெரஞ்சன் இரியகொல்ல மற்றும் அஜித் விக்கிரமசிங்க ஆகியோர் முன்னிலையாகினர்.

(ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2024 இல் வெளியிடப்பெற்றது.